முதன்மை அமர்வு நீதிமன்றம், கரூர்

முன்னிலை.- திருமதி இரா.ஹேமலதா, பி.எஸ்சி.,எம்.எல்.,

முதன்மை அமர்வு நீதிபதி.

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் வியாழக் கிழமை

அமர்வு வழக்கு எண் 1/2017

கரூர் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்ற முதல்நிலை விசாரணைப் பதிவு வழக்கு எண் 14/2008

பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண் 221/2006

-----

| | | |
|---|---|---|
| 1. | குற்ற முறையீட்டாளர் | மாநில அரசுக்காக – காவல் ஆய்வாளர், பசுபதிபாளையம் காவல் நிலையம், கரூர் மாவட்டம். |
| 2. | எதிரிகள் | 1. ராஜா, த/பெ. ராசப்பன் (A1)<br>2. கார்த்திக்குமார் என்கிற கார்த்திக், த/பெ ராமச்சந்திரன் (A2)<br>3. செல்லா என்கிற சந்திரசேகர், த/பெ சந்தானம் (A3)<br>4. செந்தில், த/பெ பாலு (A4)<br>5. சலாம், த/பெ சம்சுதீன் ராவுத்தர் (A5)<br>6. ரமேஷ் என்கிற ஆவூரமேஷ், த/பெ சுப்பிரமணியன் (A6)<br>7. பாலன் என்கிற பாலச்சந்திரன், த/பெ கிருஷ்ணசாமி (A7)<br>8. பாண்டியன், த/பெ பாலு (A9)<br>9. சுரேஷ், த/பெ மனோகரன் (A10)<br>10. சரவணன், த/பெ முனுசாமி (A11)<br>11. நல்லுசாமி, த/பெ பழனிசாமி (A12)<br>12. சரவணன், த/பெ காந்தி (A13)<br>13. பாலாஜி என்கிற ஸ்பீடு பாலாஜி, த/பெ நாராயணன் (A16) |
| 3. | குற்றச்சாட்டுகள் | 1. இ.த.ச.பிரிவுகள் 147 மற்றும் 148 – 1 முதல் 7, 10, 12, 13 மற்றும் 16 எதிரிகளுக்கு எதிராக.<br>2. இ.த.ச.பிரிவு 302 – 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக.<br>3. இ.த.ச.பிரிவு 302 உ/இ பிரிவு 149 – 4 முதல் 7, 9,10,12, 13 மற்றும் 16 எதிரிகளுக்கு எதிராக.<br>4. இ.த.ச.பிரிவு 341 – 5 மற்றும் 6 எதிரிகளுக்கு எதிராக.<br>5. இ.த.ச.பிரிவு 302 உ/இ பிரிவு 341 – 10,12,13 மற்றும் 16 எதிரிகளுக்கு எதிராக.<br>6. இ.த.ச.பிரிவு 302 உ/இ பிரிவு 120(பி) - 10,11,12 13 |

| | | |
|---|---|---|
| | | மற்றும் 16 எதிரிகளுக்கு எதிராக. |
| 4. | எதிரியின் முறையீடு | குற்றவாளி இல்லை. |
| 5. | நீதிபதியின் தீர்மானம் | குற்றவாளி இல்லை. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு.-<br>முடிவில்,<br>(அ) எதிரிகள், இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 302 உ/இ 34, 149 மற்றும் 120(பி)ன்கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன்கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகின்றது.<br>(ஆ) எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணைப்பத்திரங்கள் ரத்து செய்யப்படுகின்றன.<br>(இ) இவ்வழக்கில் குறியிடப் பட்டுள்ள சா.பொ.1 முதல் சா.பொ.18 ஐ இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ள நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்ற முதல்நிலை விசாரணைப் பதிவு வழக்கு எண் 15/2015 கோப்புடன் வைத்துக் கொள்ள அந்நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பஉத்தரவிடப்படுகிறது. | |

இவ்வழக்கு என் முன் கடந்த 18/4/2017ஆம் நாள் இறுதி விசாரணைக்கு வந்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்ற வழக்குரைஞர் திரு.கே. கனகராஜ். 1,2,10 மற்றும் 16 எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. கே. தாசப்பிரகாஷ், 3,4,5,6,9 மற்றும் 11 எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.டி. பிச்சைமுத்து, 7ஆம் எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.யு.எஸ். தர்மசேனன், 12 மற்றும் 13 எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.கே. பாலசுப்பிரணி ஆகியோர் முன்னிலையாகி நிகழ்த்திய இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்களைப் பரிசீலித்தும், இன்றுவரையில் எமது சீரிய ஆய்விலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

<u>தீர்ப்புரை.-</u>

இவ்வழக்கின் எதிரிகளின்மீது பசுபதிபாளையம் காவல்நிலைய ஆய்வாளர் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளைக் கூறி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.-

இவ்வழக்கின் முதல் எதிரி ராஜாவும், இறந்துபோன சிவா என்கிற சிவக்குமாரும் மற்றும் சிலரும் கரூரில் கூட்டாக நிதிநிறுவனம் நடத்தி வந்துள்ளனர். அதில் ஏற்பட்ட பிரச்சினையில் ஒரு சேகர் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த கொலை வழக்கில் தன்னை மாட்டிவிட்டது சிவா என்கிற சிவக்குமார்தான் என்ற அடிப்படையில் முதல் எதிரி ராஜாவிற்கும், சிவா என்கிற சிவக்குமாருக்கும் முன்விரோதம் இருந்துள்ளது. அதனால், 12.6.2006ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் சிவா என்கிற சிவக்குமாரை கொலை செய்யும் பொதுவான எண்ணத்துடன் கார் ஒன்றிலும், டி.என்.47-எம்-0108 என்ற பதிவு எண் கொண்ட யமாஹா மற்றும் டி.என்.47-கே-4371 என்ற பதிவு எண் கொண்ட சுசுகி இரு சக்கர வாகனங்களிலும் கரூர் தாந்தோணி சுங்ககேட் அருகிலுள்ள அரவிந்த் பெட்ரோல் பங்க் அருகில் வந்துள்ளனர். 7ஆவது எதிரி பாலன் என்கிற பாலச்சந்திரனிடம் சிவா என்கிற சிவக்குமார் வெளியூர் செல்வதற்காக மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு தன் மனைவி வாதி கோமதியுடன் பெட்ரோல் பங்கிற்கு வந்தபோது

1 முதல் 3 எதிரிகள் பட்டாக்கத்தியுடன் சிவா என்கிற சிவக்குமாரை நெருங்கியுள்ளனர். அதனைப் பார்த்த சிவா என்கிற சிவக்குமார் வண்டியைப் போட்டுவிட்டு வடக்குநோக்கி ஓடியுள்ளார். ஆனால், எதிரிகள் அவரைத் துரத்திச் சென்று வடபுறமுள்ள காம்பவுண்டு அருகில் சிவா என்கிற சிவக்குமாரை மறித்து தலையில் மாறிமாறி வெட்டியும், அவர் கைகளால் தடுத்தபோது கைகளிலும் வெட்டியும், 3 ஆவது எதிரி செல்லா என்கிற சந்திரசேகர் கத்தியால் அவரது இடது காலில் வெட்டியும் கொலை செய்துள்ளனர். மேலும், பெட்ரோல் பங்கிலிருந்து தப்பித்து கிழக்குநோக்கி வந்தால் கொலை செய்யலாம் என்ற எண்ணத்தில் 7,8 மற்றும் 9 எதிரிகள் பட்டாக்கத்தியுடன் நின்றுள்ளனர். 5 மற்றும் 6 எதிரிகள் பெட்ரோல் பங்கில் வேலை செய்தவர்களையும், பெட்ரோல் போட வந்தவர்களையும் தடுத்து நிறுத்தி, பின் 4 ஆவது எதிரியுடன் யமாஹா வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர். 10, 12 முதல் 16 எதிரிகளை சிவா என்கிற சிவக்குமாரை கொலை செய்வதற்கு 11 ஆவது எதிரி ஈரோடு சரவணன் ஏற்பாடு செய்துள்ளார். 11 ஆவது எதிரி ஈரோடு சரவணனுடன் மற்ற எதிரிகள் சேர்ந்து சதித்திட்டம் தீட்டி சிவா என்கிற சிவக்குமாரை கொலை செய்துள்ளனர். எனவே, எதிரிகள் அனைவரும் இ.த.ச.பிரிவு 120(பி) உ/இ பிரிவுகள் 302, 147, 148, 341, உ/இ 149 ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனர்.

2) கற்றறிந்த நீதித்துறை நடுவர் எண் 1, கரூர் மேற்படி வழக்கை முதல்நிலை விசாரணை பதிவு வழக்கு எண் 14/2008-ஆக கோப்பில் எடுத்துக்கொண்டு, எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இ.த.ச.பிரிவு 207 ன்கீழ் இலவசமாக வழங்கிய பின்னர், இ.த.ச.பிரிவு 302 ன்கீழான குற்றச்சாட்டு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், வழக்குக் கோப்பினை கு.வி.மு.ச.பிரிவு 209 ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைத்தார்கள். வழக்குக் கோப்பினைப் பெற்ற இந்நீதிமன்றம், அமர்வு வழக்கு எண் 1/2017 ஆக கோப்பில் எடுத்துக் கொண்டது.

3) இவ்வழக்கில் எதிரிகள் ஆஜரானவுடன், வழக்குக் கோப்புக்களையும், ஆவணங்களையும் பரிசீலித்த இந்நீதிமன்றம், எதிரிகள் இவ்வழக்கின் குற்றங்களைச் செய்திருக்க முகாந்திரம் இருப்பதாகக் கருதியதால், எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 302 உ/இ பிரிவுகள் 34, 149 மற்றும் 120(பி)ன்கீழ் குற்றச்சாட்டு வனைந்து, எதிரிகளுக்குப் படித்துக்காட்டி, குற்றச்சாட்டுகள் குறித்து வினவியபோது, எதிரிகள் மேற்படி குற்றச்சாட்டுகளை மறுத்ததோடு, வழக்கில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதனையடுத்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப் பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.15 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.35 வரையிலான சான்றாவணங்களும், சான்றுப் பொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.18 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் வருமாறு:</u>-

அ.சா.1 கோமதி கொலையுண்டு இறந்துபோன சிவா என்கிற சிவக்குமாரின் 2 ஆவது மனைவி. அவருடைய கணவர் சிவக்குமார் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். அவர் ஒரு கொலை வழக்கில் சிறிது நாட்கள் சிறையில் இருந்தார். கடந்த 12.6.2006 அன்று மதியம் 2.00 மணியளவில் அ.சா.1 ம் அவருடைய கணவரும் வீட்டுப் பொருட்கள் வாங்குவதற்காக இருசக்கர

வாகனத்தில் சென்றுள்ளார்கள். அப்போது வண்டியில் பெட்ரோல் இல்லாததால், பெட்ரோல் போடுவதற்காக சுங்ககேட் பெட்ரோல் பங்கிற்கு அ.சா.1 ம் அவருடைய கணவரும் சென்றுள்ளனர். அப்போது அ.சா.1 வண்டியை விட்டு இறங்கி பெட்ரோல் பங்கிற்கு எதிரில் உள்ள இளநீர் கடையில் நின்றுள்ளார். மதியம் 2.30 மணியளவில் அய்யோ, அய்யோ என்று சத்தம் போடுவதைக் கேட்டு அ.சா.1 ஒடிச் சென்று பார்த்தபோது அவருடைய கணவர் சிவக்குமார் வெட்டுப்பட்டுக் கிடந்தார். அப்போது அவருக்கு உயிர் இருந்ததால் அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் இறந்துவிட்டதாக மருத்துவர் சொல்லியுள்ளார். பிறகு கரூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று பிணவறையில் அ.சா.1ன் கணவரின் உடலை வைத்துள்ளனர்.

6) மேற்படி சம்பவம் தொடர்பாக 12.6.2006 அன்று மாலை 16.30 மணிக்கு அ.சா.1 கரூர் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் ஆஜராகி, அப்போது பணியில் இருந்த அ.சா.14 சீனிவாசனிடம் எழுத்துமூலமான புகார் (அ.சா.ஆ.18) கொடுத்துள்ளார். அதிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் அ.சா.ஆ.1. அந்தப் புகாரைப் பெற்ற அ.சா.1 நிலையக் குற்ற எண் 221/2006ல் இ.த.ச.பிரிவு 147, 148, 341 மற்றும் 302ன்கீழ் வழக்குப் பதிவு செய்து, முதல் தகவலறிக்கை (அ.சா.ஆ.19) தயார் செய்துள்ளார். பின்னர் முதல் தகவலறிக்கையை நீதிமன்றத்திற்கும், அதன் நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். மற்றொரு நகலை கரூர் நகர காவல் ஆய்வாளர், பசுபதிபாளையம் (பொறுப்பு)க்கு அனுப்பி வைத்துள்ளார்.

7) அ.சா.14 சீனிவாசன் பதிவு செய்திருந்த வழக்கை கரூர் பசுபதிபாளையம் காவல்நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளர் ஞானசேகரன் மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்டார். அவர் 12.6.2006 அன்று 17.30 மணிக்கு சம்பவ இடமான ஸ்ரீஅரவிந்த் ஏஜென்சி பெட்ரோல் பங்க் சென்று அ.சா.3 திரு. துரை குமாரசாமி, அப்போதைய ஏமூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஒரு முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அ.சா.2 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.20 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த சிமெண்ட் தரை துகள்கள் (சா.பொ.3) மற்றும் இரத்தம் படியாத சிமெண்ட் தரை துகள்கள் (சா.பொ.4), கருப்பு நிற செருப்புகள் நான்கு (சா.பொ.2 வரிசை) மற்றும் பச்சை நிற இருசக்கர வாகனம் (சா.பொ.1) ஆகியவற்றை அ.சா.ஆ.3 மகசரில் கைப்பற்றியுள்ளார்.

8) பின்னர் ஆய்வாளர் ஞானசேகரன் கரூர் அரசு தலைமை மருத்துவமனைக்குப் புறப்பட்டு இரவு 7.45 மணிக்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சிவக்குமாரின் பிரேதத்தின்மீது பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.21 தயாரித்துள்ளார். பிறகு இரவு 10.45 மணிக்கு பிரேத விசாரணையை முடித்து இறப்பு குறித்த காரணம் அறியும்பொருட்டு பிரேதப் பரிசோதனை செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் (அ.சா.ஆ.16) கொடுத்து பிரேதத்தை அசா.12 சதீஸ்குமார், தலைமைக் காவலர்மூலம் அனுப்பி வைத்துள்ளார். பின்பு சாட்சிகள் அ.சா.1 கோமதி, ஜான்சன், ரவிக்குமார், வேலன், அ.சா.2 ராஜா, நல்லசெல்வி, அங்கம்மாள், குப்புசாமி, கமலம், அ.சா.3 துரை குமாரசாமி மற்றும் முருகேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார்.

9) அ.சா.12 கொடுத்த வேண்டுகோள் கடிதத்தைப் பெற்ற அ.சா.13 டாக்டர் செந்தில்வேலன் பிரேதத்தின்மீது பிரேதப் பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அவரது பரிசோதனையில் கீழ்க்கண்ட வெளிக்காயங்கள் இருந்துள்ளன.-

1. 12 செ.மீ.நீளமும் 5 செ.மீ ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். அது இடது கன்னத்தில் இருந்து இடது காது வழியாக இடது புற பின் மண்டைக்குச் சென்றது. அந்த காயத்தின் வழியாக மூளை திசுக்களும் உடைந்துபோன எலும்புகளும் வெளியில் தெரிந்தன. அந்தக் காயம் மேலிருந்து கீழாக சற்றே குறுக்கு வாட்டில் நீள்வட்ட வடிவில் இருந்தது. அந்தக் காயத்தில் இடதுபுற கரோட்டிக் இரத்தக்குழாய் மற்றும் ஜுகுலா ரத்தக்குழாய் ஆகியவை முழுவதுமாக துண்டிக்கப்பட்டிருந்தன.
2. 16 செ.மீ. நீளமும், 9 செ.மீ.ஆழமும் உடைய நீள்வட்ட வடிவிலான ஒரு வெட்டுக்காயம். இது இடதுபுறநெற்றியில் இருந்து இடது புற டெம்பொரல், இடதுபுற பின்மண்டைவரையில் சென்றது. இதன்வழியாகவும் மூளை திசுக்களும்,உடைந்த எலும்புகளும் தெரிந்தன. இது சற்றே குறுக்குவாட்டில் மேலிருந்து கீழ்நோக்கி அமைந்திருந்தது.
3. 10 செ.மீ. நீளமும், 5 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இது இடதுபுற மண்டையில் பெரைட்டிடா டெம்பொரல் பகுதியில் இருநதது.
4. 7 செ.மீ.நீளமும், 5 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இது இடதுபுற பெரைட்டல் மண்டையில் இருந்தது. இதன்வழியே மூளை திசுக்கள் தெரிந்தன.
5. 8 செ.மீ. நீளமும், 2 செ.மீ. ஆழமும் உள்ள ஒரு வெட்டுக்காயம். இது வலது உள்ளங்கையில் கட்டை விரலின் கீழ்பாகத்தில் இருந்து ஆள்காட்டி விரலின் கீழ்பாகம் வரை இருந்தது.
6. வலது கையில் ஆள்காட்டி விரல் மற்றும் நடுவிரல் அதன் அடிப்பாகத்தோடு சேர்த்து துண்டிக்கப்பட்டிருந்தது.
7. இடது முன்கையில் பின்புறத்தில் 6 செ.மீ நீளமு, 4 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இது இடது ஆள்காட்டி விரலின் அடிப்புறத்தில் இருந்தது. அதன் வழியே வெட்டப்பட்ட எலும்புகள் தெரிந்தன.
8. 3 செ.மீ. நீளமும், 2 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இடதுபுற மணிக்கட்டின் வெளிப்புறத்தில் இருந்தது.
9. 7 செ.மீ.நீளமும், 5 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இடதுபுற முன்கையில், முழங்கை மூட்டுக்கு சற்று கீழே இருந்தது. இந்த காயத்தின் வழியே இடது அல்னா எலும்பு முழுவதுமாக துண்டிக்கப்பட்டிருந்தது.
10. 2 செ.மீ. அகலமும், 6 செ.மீ. ஆழமும் உடைய ஒரு குத்துக்காயம். இடது புற தாடை எலும்பின் அடியில் காதுக்குக் கீழே இருந்தது.
11. 3 செ.மீ. நீளமும், 2 செ.மீ. அகலமும் உடைய ஒரு சிராய்ப்புக் காயம். வலது

முழங்கையின் உள்புறம் இருந்தது.

12.8 செ.மீ. நீளமும், 4 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இடது முழங்காலுக்குக் கீழ் இடது முன்னங்காலில் இருந்தது.

13.3 செ.மீ. நீளமும், 1 செ.மீ. ஆழமும் உடைய ஒரு வெட்டுக்காயம். இடது புற காலின் வெளிப்புறத்தில் இருந்தது.

14. 3 செ.மீ. x 2 செ.மீ. அளவுள்ள இரண்டு சிராய்ப்புக் காயங்கள். இடது முன்கையில் முழங்கைக்கு அருகில் இருந்தது.

அவரது உள்ளுறுப்புக்களைப் பரிசோதித்ததில், அவரது மண்டையோட்டின் இடது பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு உடைப்புகள் இருந்தன. அவரது மூளையில் ஒன்றுக்கு மேற்பட்ட வெட்டுக்காயங்களும் இருந்தன. மூளை வெளிறிய நிலையில் இருந்தது. மூளைச்சவ்வு கிழிந்திருந்தது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. நுரையீரல் வெளிறி இருந்தது. இருதயம் இரத்தமின்றியும், வெளிறியும் காணப்பட்டது. அவரது வயிற்றில் 200 கிராம் அளவுள்ள பிரௌன் கலர் உணவுத்துகள்கள் இருந்தன. குடல் சற்று வீங்கியும், வெளிறியும்,உள்ளே காற்றுடனும் இருந்தது. மூத்திரப்பை காலியாக இருந்தது. அனைத்து உள்ளுறுப்புக்களும் வெளிறிய நிலையில் இருந்தன.

மேற்படி இறந்த நபர் தலையில் ஏற்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட வெட்டுக்காயங்களாலும், மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாய்கள் வெட்டுப்பட்டதாலும் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தப்போக்கு காரமாக பிரதப் பரிசோதனைக்கு 18 முதல் 24 மணி நேரத்திற்கு முன்னதாக இறந்திருக்கலாம் என்று அ.சா.13 கருத்துத் தெரிவித்து அ.சா.ஆ.17 பிரேதப் பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார்.

10) பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் அ.சா.12 தலைமைக் காவலர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளார். பிரேதத்தின்மீதிருந்த ரோஸ் கலர் அரைக்கை சட்டை (சா.பொ.12), வெள்ளை முண்டா பனியன் (சா.பொ.13), புளு கலர் ஜட்டி (சா.பொ.14) மற்றும் கைலி (சா.பொ.15) ஆகியவற்றை அ.சா.ஆ.15 தனியறிக்கைமூலம் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

11) கடந்த 14.6.2006 ஆம் தேதியன்று கரூர் நகர ஆய்வாளர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அ.சா.4 மணிகண்டன்,அ.சா.5 சரவணன் என்கிற பாலசுப்பிரமணியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் 13.6.2006 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நீதிமன்றத்தில் சரணடைந்து சிறையில் இருந்த முதல் எதிரி ராஜாவையும், மதுரை மத்திய சிறையில் இருந்த கார்த்திக்குமார் என்கிற கார்த்திக்கையும் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க கரூர் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். இந்நிலையில் 24.6.2006 ஆம் தேதியன்று சுபதிபாளையம் காவல் ஆய்வாளர் போலீசாருடன் புறப்பட்டு புலியூர் பெட்ரோல் பங்க் எதிரே உள்ள மதுபானக் கடை அருகில் சந்தேகத்திற்கிடமாக நின்றுகொண்டிருந்த 7 நபர்களைப் பிடித்து விசாரித்தபோது, அவர்கள்

அனைவரும் பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண் 221/2006 வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்ததால் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் உத்தரவுப்படி முதல்நிலைக் காவலர் மதியழகன் மடிகணிணியில் அ.சா.3 மற்றும் ஒரு முருகேசன் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் முறையே அ.சா.ஆ.22 முதல் அ.சா.ஆ.28. அந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எதிரி செல்லா அடையாளம் காட்டிய பட்டாக்கத்தியை மகசரிலும், எதிரி சலாம் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த 59 செ.மீ. நீளமுள்ள கத்தியை ஒரு மகசரிலும்,எதிரிகள் ரமேஷ், பாண்டியன் ஆகியோர் எடுத்து ஆஜர் செய்த கத்திகளை மகசரிலும் கைப்பற்றியுள்ளார். அந்த 4 கத்திகள் சா.பொ.16 வரிசை. எதிரி செந்தில் அடையாளம் காட்டி ஆஜர் செய்த TN.47-ML-0108 என்ற கருப்பு கலர் யமாஹா வாகனத்தை மகசரில் கைப்பற்றினார். எதிரி அருண் என்கிற அருண்குமார் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த TN39-J-0025 என்ற வெள்ளை மாருதி ஜென் காரை (சா.பொ.11) அதே மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய தடயங்களுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். தடயங்களை படிவம் 95ன்மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். 25.6.2006ஆம் தேதி பகல் 12.30 மணியளவில் எதிரி பாலனை புலியூர் மேல்புறம் உள்ள ரெயில்வே லைனில் கைது செய்து விசாரித்தபோது அவர் பசுபதிபாளையம் குற்ற எண் 221/2006 வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாகச் சொன்னார். அ.சா.7 ராஜகோபால், அப்போதைய மேலப்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மற்றும் அவர் உதவியாளர் கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் அவருடைய ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் பசுபதிபாளையம் வடக்கே சுடுகாட்டின் அருகில் உள்ள முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சா.பொ.5 பட்டா கத்தியை பகல் 3.00 மணிக்கு அ.சா.ஆ.5 மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். தடயங்களை படிவம் 95ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். சாட்சிகள் அ.சா.7 ராஜகோபால் மற்றும் கனகராஜ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

12) கடந்த 26.6.2006 அன்று இவ்வழக்கு சம்பந்தமாக திருச்சி மத்திய சிறையில் இருந்த எதிரி ராஜா மற்றும் மதுரை மத்திய சிறையில் இருந்த கார்த்திக்குமார் என்கிற கார்த்திக் ஆகிய இருவரையும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, 3 நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தார். 28.6.2006அன்று மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.8 கந்தசாமி, அப்போதைய சணப்பிரட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஒரு சுப்பையன் முன்னிலையில் பதிவு செய்தார். எதிரி ராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிகள் அ.சா.ஆ.30 மற்றும் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.31. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ராஜா கரூர் பைபாஸ் ரோட்டிலிருந்து செல்லாண்டிபாளையம் வழியாக திருச்சி செல்லும் பிரிவு அருகில் முள்காட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த

பட்டா கத்தி (சா.பொ.17)ஐ அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.32 மகசரில் கைப்பற்றினார். எதிரி கார்த்திக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி காலை 11.30 மணிக்கு கரூர் பைபாஸ் ரோட்டில் அமராவதி ஆற்றுக்கரையில் தெற்குப்புறம் உள்ள முள்காட்டில் எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த பட்டா கத்தி (சா.பொ.18) ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.33 மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். தடயங்களை படிவம் 95 ன்மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார். பின்னர் சாட்சிகள் கந்தசாமி, சுப்பையன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். 13.7.2006 அன்று ஈரோடு சரவணனை போலீஸ் காவலுக்கு எடுத்து 14.7.2006 அன்று சாட்சிகள் அ.சா.7 ராஜகோபால் மற்றும் சுப்பையன் ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்துள்ளார். மேற்படி சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

13) இந்நிலையில், அ.சா.15 சிவராமன், கரூர் பசுபதிபாளையம் காவல் ஆய்வாளராக 14.7.2006 ல் பொறுப்பேற்றார். அவர் இவ்வழக்கு சம்பந்தமாக 26.7.2006 ஆம்தேதியில் காலை 9.00 மணிக்கு தெரசா காலனி பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்த எதிரி சுரேஷை கைது செய்துள்ளார்.அப்போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.8 கந்தசாமி மற்றும் சுப்பையன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திருமாநிலையூர் முட்புதரிலிருந்து எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். மபின்னர் எதிர் மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தார். தடயத்தை படிவம் 95 ன்மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

14) மேலும், கடந்த 9.8.2006 ஆம் தேதியன்று திருச்சி மத்திய சிறையில் இருந்த எதிரிகள் ஆனந்தன் என்கிற கண்ணாடி ஆனந்த், பாம்பாலாஜி மற்றும் ஸ்பீடு பாலாஜி ஆகியோரை போலீஸ் காவலில் எடுத்து 10.8.2006 ஆம் தேதியன்று காலை 8.00 மணிக்கு அவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை அ.சா.9 நந்தகுமார், அப்போதைய திருமாநிலையூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஒரு கருப்பன் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திருமாநிலையூருக்கு வடபுறமுள்ள அமராவதி ஆற்றின் தென்கரையில் உள்ள முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். அதேபோல் எதிரி பாம் பாலாஜி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே பகுதியில் உள்ள முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். அதேபோல் ஸபீடு பாலாஜி அதே பகுதியில் உள்ள முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரிகளையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கும், சொத்துக்களை படிவம் 95 ன்கீழ் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் அ.சா.9 மற்றும் கருப்பன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 11.9.2006 ஆம் தேதி சாட்சி

பிரபாகரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இறந்துபோன சிவக்கமாரின் பிரேதத்தை பிரேதப் பரிசோதனை செய்த கரூர் அரசு மருத்துவமனை மருத்துவர் செந்தில் வேலனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேதப் பரிசோதனை சான்று பெற்றுள்ளார். பின்னர் 30.8.2007 ஆம் தேதியில் இவ்வழக்கில் தொடர்புடைய 7 ஆம் எதிரி அருண் என்கிற அருண்பிரசாத் என்பவரிடம் கு.வி.மு.ச.பிரிவு 164 ன்கீழ் வாக்குமூலம் பெற முதன்மை நீதித்துறை நடுவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு, 10.10.2007 ஆம் தேதியில் எதிரி அருண் என்கிற அருண்பிரசாத் என்பவரிடம் நீதித்துறை நடுவர் எண் 2, குளித்தலை மூலமாக கு.வி.மு.ச.பிரிவு 164 வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் பொன்னர் (அ.சா.6) மற்றும் வீரமலை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். தடயங்களை பகுப்பாய்விற்கு அனுப்பி பின்னிட்டு தடய ஆய்வகத்திலிருந்து உயிரியல் அறிக்கை (அ.சா.ஆ.34) மற்றும் குருதியியல் அறிக்கை (அ.சா.35) பெற்றுள்ளார். பின்னர் தன் விசாரணையை முடித்து எதிரிகளின்மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

15) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1, 2, 4 முதல் அ.சா.6 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காததால், பிறழ் சாட்சியாகக் கருதப்பட்டுள்ளார்கள்.

16) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3, அ.சா.7 முதல் அ.சா.15 சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்குப் பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (பி)ன்கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தனர். மேலும், எதிரிகள் தங்கள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரித்துக்கொள்ளவில்லை. பின் இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

17) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிகளின்மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>பிரச்சினை.</u>-

18) முதல் எதிரி ராஜாவும், இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சிவா என்கிற சிவக்குமாரும் மற்றும் சிலரும் நிதிநிறுவனம் நடத்தி வந்துள்ளனர். அதில் ஏற்பட்ட பிரச்சினையில் சேகர் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த கொலை வழக்கில் முதல் எதிரி ராஜா மாட்டிக்கொண்டுள்ளார். இந்நிலைக்கு இறந்துபோன சிவா என்கிற சிவக்குமார்தான் காரணம் என்று முதல் எதிரி சிவா என்கிற சிவக்குமாருடன் முன்விரோதம் கொணடுள்ளார். இந்நிலையில் 12.6.2006 ஆம் தேதியில் பகல் 2.30 மணியளவில் சிவா என்கிற சிவக்குமார் தன் மனைவி கோமதியுடன் இருசக்கர வாகனத்தில் அரவிந்த் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட வந்துள்ளார். அப்போது 1 முதல் 3 எதிரிகள் அவரை ஓடஓட விரட்டி வடபுறமுள்ள காம்பவுண்டு அருகில் சிவா என்ற சிவக்குமாரை வெட்டிக் கொலை செய்துள்ளனர். சிவா என்ற சிவக்குமார் தப்பி வந்தால் கொலை செய்யலாம் என்ற எண்ணத்தில் 7 முதல் 9 எதிரிகள் பட்டாக்கத்தியுடன் நின்றுள்ளனர். 5 மற்றும் 6 எதிரிகள் பெட்ரோல் பங்கிற்கு பெட்ரோல் போட வந்தவர்களையும், ஊழியர்களையும் தடுத்து நிறுத்தி 4 ஆவது எதிரி செந்திலுடன் யமாஹா

வண்டியில் தப்பிச் சென்றுவிட்டனர். 10,12,13 முதல் 16 எதிரிகளை 11 ஆவது எதிரி கொலை செய்ய ஏற்பாடு செய்துள்ளார். எதிரிகள் 11 ஆவது எதிரி ஈரோடு சரவணனுடன் சத்தித்திட்டம் தீட்டி சிவா என்கிற சிவக்குமாரை கொலை செய்துள்ளனர். எனவே, எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 302, 147, 148, 341, உ/இ 149 ன்கீழ் தண்டிக்கத்க்க குற்றம் புரிந்துள்ளார்கள். இதுவே அரசு தரப்பில் எதிரிகளின்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு.

19) இந்த வழககில் அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்க விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் அ.சா.1 கோமதி, அ.சா.2 வேலவன், அ.சா.4 மணிகண்டன் மற்றும் அ.சா.5 சரவணன் என்கிற பாலசுப்பிரமணியன் ஆகியோர் விபத்தைக் நேரில் கண்ட சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.6 பொன்னர் சம்பவத்தன்று எதிரிகள் கொலை செய்துவிட்டு அரிவாள்களுடன் ஆற்றுக்குள் ஒடியது சம்பந்தமாக சாட்சியமளிக்க விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 12.6.2006 ஆம் தேதியன்று மதியம் 2.00 மணிக்கு தானும், தன் கணவரும் (சிவா என்கிற சிவக்குமார்) வீட்டிற்கான பொருட்கள் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அப்போது வண்டியில் பெட்ரோல் இல்லாததால், பெட்ரோல் போடுவதற்காக சுங்ககேட் பெட்ரோல் பங்கிற்கு சென்றதாகவும், அப்போது தான் வண்டிடியை விட்டு இறங்கி பெட்ரோல் பங்கிற்கு எதிரில் உள்ள இளநீர் கடையில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது மதியம் 2.30 மணிக்கு "அய்யோ, அய்யோ" என்று சத்தம் போட்டார்கள் என்றும், தான் ஓடிச்சென்று பார்த்தபோது தன் கணவர் வெட்டுப்பட்டுக் கிடந்தார் என்றும், அங்கு கும்பலாக இருந்ததால் யார் வெட்டினார்கள் என்று தெரியாது என்றும், அப்போது அவருக்கு உயிர் இருந்ததால் அவரை அப்பல்லோ மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு தன் கணவர் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னதாகவும், பிறகு தன் கணவரை கரூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அங்கு பிணவறையில் அவருடைய கணவரின் பிரேதத்தை வைத்ததாகவும், அதன்பிறகு தனது உறவினர்கள் வந்ததாகவும், அதன்பின் யாரோ புகார் எழுதிக் கொடுத்ததாகவும், தான் அதிர்ச்சியில் இருந்ததால் கையெழுத்துமட்டும் போட்டதாகவும், அந்தக் கையெழுத்து அ.சா.ஆ.1 என்றும் தனது கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் சா.பொ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார். இவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காததால் பிறழ் சாட்சியாகக் கருதப்பட்டுள்ளார்.

20) அ.சா.14 சீனிவாசன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், அன்றைய தினம் 16.30 மணிக்கு வாதி கோமதி நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துமூலமான புகாரை மனுவை பெற்று பசுபதிபாளையம் கா.நி. கு.எண் 221/2006 ல் இ.த.ச.பிரிவுகள் 147, 148, 341 மற்றும் 302 ன்கீழ் வழக்குப் பதிவு செய்ததாகக் கூறியுள்ளார். இவ்வழக்கின் புகார்தாரராகிய அ.சா.1 கோமதியே புகாரை யாரோ எழுதியதாகவும், தான் கையெழுத்து மட்டுமே போட்டதாகவும் கூறியுள்ளநிலையில் அ.சா.14 ன் சாட்சியம் எந்தவிதத்திலும் அரசு தரப்பு வழக்குக்கு உதவிகரமாக இருக்காது. மேலும், அ.சா.1 சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாவார். அவரே தனது சாட்சியத்தில், கும்பலாக இருநததால் யார் வெட்டினார்கள் தனக்குத் தெரியாது என்று கூறிவிட்டபிறகு எதிரிகள்தான் இந்த வழக்கின் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று கருத

முடியாது. மேலும், விபத்தைக் கண்ணுற்றதாகக் கூறும் மற்றொரு சாட்சியான அ.சா.2 ராஜா தனது சாட்சியத்தில் தான் மதியம் சாப்பிடுவதற்காக சுங்ககேட் அருகில் உள்ள ஓட்டலுக்குச் சென்றதாகவும், தான் சாப்பிட்டு வரும்போது ஒருவர் வெட்டுப்பட்டுக் கிடந்தார் என்றும்,அவர் யார் என்று தனக்குத் தெரியாது என்றும், அவரை யார் வெட்டினார்கள் என்றும் தனக்குத் தெரியாது என்றும் கூறி அரசு தரப்புக்குப் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார். மற்றொரு விபத்தைக் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 மணிகண்டன் மற்றும் அ.சா.5 பாலசுப்பிரமணியன் ஆகியோர் தங்கள் சாட்சியங்களில் சம்பவத்தின்போது தாங்கள் ஊரில் இல்லை என்றும், ஆகவே, சம்பவம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் அ.சா.6 பொன்னர் தனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் கூறி, அரசு தரப்புக்குப் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டார்கள். ஆக, அரசு தரப்புச் சாட்சிகளின் சாட்சிகளில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் 1 முதல் 3 எதிரிகள் சிவா என்ற சிவக்குமாரை வெட்டிக் கொலை செய்ததாகவோ, 7 முதல் 9 எதிரிகள் சிவா என்கிற சிவக்குமார் தப்பி வந்தால் கொலை செய்யலாம் என்ற எண்ணத்தில் காத்திருந்ததாகவோ கூறவில்லை. மேலும், சம்பவ சமயத்தில் பெட்ரோல் பங்கில் 5 மற்றும் 6 எதிரிகள் பட்டாக்கத்தியுடன் பெட்ரோல் போட வந்தவர்களையும், பெட்ரோல் பங்க் ஊழியர்களையும் தடுத்து, 4 ஆவது எதிரி வந்த வண்டியில் தப்பிச் சென்றதாக அரசு தரப்பில் கூறி இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அரவிந்த் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பும் பணி செய்து வந்த ஜான்சன் என்பவரை விசாரிக்க இருப்பதாக சாட்சிப் பட்டியலில் கூறியிருந்தாலும், அவர் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே, 4 முதல் 6 எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்பதில் சந்தேகம் எழுகிறது. மேலும், அரசு தரப்பில் 11 ஆவது எதிரி ஈரோடு சரவணனுடன் மற்ற எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி சதித்திட்டம் தீட்டி சிவா என்கிற சிவக்குமாரை கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அதற்கு அடிப்படை ஆதாரம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

21) இந்த வழக்கில் எதிரிகளில் 7 ஆம் எதிரி பாலன், 9 ஆம் எதிரி சுரேஷ், 13 ஆம் எதிரி பாலாஜி என்கிற ஸ்பீடு பாலாஜி ,3 ஆம் எதிரி செல்லா என்கிற சந்திரசேகர், 6 ஆம் எதிரி ரமேஷ் என்கிற ஆவூரமேஷ், 8 ஆம் எதிரி பாண்டியன், 4 ஆம் எதிரி செந்தில் ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவு செய்தபின், அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சா.பொ.6 முதல் 9 அருவாள்கள் சா.பொ.11 மாருதி ஜென் கார் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் கூறினாலும், அவற்றை உறுதிபடுத்தக்கூடிய சாட்சியம் (Corroborative evidence) எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படாதநிலையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களுக்கும், கைப்பற்றுதல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க முடியாது. மேலும், சா.பொ.3 மற்றும் சா.பொ.6 முதல் சா.பொ.9 ல் உறைந்திருந்த இரத்தம் இறந்துபோனவரின் இரத்தவகையைச் சேர்ந்தது என்பதை உயிரியல் அறிக்கை அ.சா.ஆ.34) மற்றும் குருதியியல் அறிக்கை (அ.சா.ஆ.35) ஆகியவற்றை அரசு தரப்பில் தாக்கல் செய்திருந்தாலும், அவை அவற்றை வழங்கிய அலுவலர்கள்மூலம் அரசு தரப்பில் நிரூபிக்கத் தவறிவிட்டனர். அ.சா.13 மருத்துவர், சிவா என்கிற சிவக்குமாரின் பிரேதத்தைப் பரிசோதித்து

பிரேதப் பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.17 வழங்கியுள்ளார். அவரது சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.17 ன்மூலம் கொலையுண்டவருக்கு பலத்த காயங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தாலும், அவை இந்த எதிரிகளால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு சாட்சியம் எதுவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வழக்கில் பெரும்பகுதி புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் ஞானசேகரன் மேற்கொண்டுள்ளார். ஆனால், அவர் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை. அவரது புலன் விசாரணை குறித்து அ.சா.15 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புலன் விசாரணை அதிகாரி ஞானசேகரன், காவல் ஆய்வாளரை விசாரிக்காததற்கு அரசு தரப்பில் விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. மேற்படி அரசு தரப்பு வழக்கில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் அரசு தரப்பு வழக்கின்மீது நம்பிக்கையைத் தோற்றுவிக்கவில்லை. ஆகவே, எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 147, 148, 341, 302 உ/இ 34, 149 மற்றும் 120(பி)ன்கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22) முடிவில்,

(அ) எதிரிகள், இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 302 உ/இ 34, 149 மற்றும் 120(பி)ன்கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன்கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகின்றது.

(ஆ) எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணைப்பத்திரங்கள் ரத்து செய்யப் படுகின்றன.

(இ) இவ்வழக்கில் குறியிடப் பட்டுள்ள சா.பொ.1 முதல் சா.பொ.18 ஐ இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ள நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்ற முதல்நிலை விசாரணைப் பதிவு வழக்கு எண் 15/2015 கோப்புடன் வைத்துக் கொள்ள அந்நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

முடிவில், எதிரி இ.த.ச.பிரிவுகள் 294(பி), 307 மற்றும் 506(ii)ன்கீழ் குற்றவாளி இல்லை என் முடிவு செய்து அவரை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றேன். எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரம் இரத்து செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஐ மேல்முறையீடு காலத்திற்குப்பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிற்கு மாற்றம் செய்து, எம்மால் திருத்தம் செய்து,இன்றைய 2017 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் அவையறியப் பகரப்பபட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
கரூர்.

<u>சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்களின் அட்டவணை</u>:-

<u>அரசு தரப்புச் சாட்சிகள்-</u>

அ.சா.1. கோமதி

அ.சா.2. ராஜா

அ.சா.3. துரைகுமாரசாமி, கிராம நிர்வாக அலுவலர்.

அ.சா.4. மணிகண்டன்

அ.சா.5. சரவணன் என்கிற பாலசுப்பிரமணியன்

அ.சா.6. பொன்னர்

அ.சா.7. ராஜகோபால், கிராம நிர்வாக அலுவலர்.

அ.சா.8. கந்தசாமி, கிராம நிர்வாக அலுவலர்.

அ.சா.9. நந்தகோபால், கிராம நிர்வாக அலுவலர்.

அ.சா.10. பிரபாகரன்

அ.சா.11. அருண்பிரசாத்

அ.சா.12. சதீஸ்குமார், தலைமைக் காவலர்

அ.சா.13. கே. செந்தமிழ்வேலன்

அ.சா.14. சீனிவாசன், உதவி ஆய்வாளர்

அ.சா.15. சிவராமன்

அரசு தரப்புச் சான்றாவணங்கள்.-

அ.சா.ஆ.1. புகாரிலுள்ள அ.சா.1 ன் கையொப்பம்

அ.சா.ஆ.2. பார்வை மகசர்.

அ.சா.ஆ.3. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.4. 7 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.5. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.6. 9 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.7. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.8. ஆனந்தன் என்ற கண்ணாடி ஆனந்தன் என்ற ஆறுமுகம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.9. 13 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.10. பாம் பாலாஜியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.11. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.12. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.13. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.14. கு.வி.மு.ச.பிரிவு 164 ன்படி அரு'ண் என்ற அருண்பிரசாத் கொடுத்த வாக்குமூலம்.

அ.சா.ஆ.15. தனி அறிக்கை.

அ.சா.ஆ.16. பிரேதப் பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம்.

அ.சா.ஆ.17. பிரேதப் பரிசோதனை அறிக்கை.

அ.சா.ஆ.18. புகார்.

அ.சா.ஆ.19. முதல் தகவலறிக்கை.

அ.சா.ஆ.20. மாதிரி வரைபடம்.

அ.சா.ஆ.21. பிரேத விசாரணை அறிக்கை.

அ.சா.ஆ.22. 3 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.23. 5 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின்அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.24. 6 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.25. 9 ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.26. அருண் என்கிற அருண்பிரசாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.27. அன்பு என்கிற சுரேஷ்பாபு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.28. 4 ஆவது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.29. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.30. முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.31. 2 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி.

அ.சா.ஆ.32. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.33. கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.34.உயிரியல் அறிக்கை.

அ.சா.ஆ.35. குருதியியல் அறிக்கை.

அரசு தரப்புச் சான்றுப் பொருட்கள்.-

சா.பொ.1 லிப்ரா இருசக்கர வாகனம்.

சா.பொ.2. செருப்பு வரிசை.

சா.பொ.3.இரத்தம் படிந்த சிமெண்ட் தரை.

சா.பொ.4. இரத்தம் படியாத சிமெண்ட்தரை.

சா.பொ.5. பட்டா கத்தி.

சா.பொ.6.அருவாள்.

சா.பொ.7. அருவாள்.

சா.பொ.8. அருவாள்.

சா.பொ.9.அருவாள்.

சா.பொ.10. டி.வி.எஸ். மேக்ஸ் 100 இருசக்கர வாகனம்.

சா.பொ.11. மாருதி ஜென் கார்.

சா.பொ.12. அரைக்கை சட்டை.

சா.பொ.13. பனியன்.

சா.பொ.14. ஜட்டி

சா.பொ.15. கைலி

சா.பொ.16. கத்திகள் 4.

சா.பொ.17. கத்தி

சா.பொ.18. கத்தி.

எதிரி தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியமும், சான்றுப் பொருளும் இல்லை.

மு.அ.நீ., கரூர்.

பெறுநர்
தலைமைப் பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம்,

நகல்:-
1. மாவட்ட ஆட்சியர், கரூர்
2. காவல்துறை கண்காணிப்பாளர், கரூர்.
3. நீதித்துறை நடுவர் எண் 1, கரூர்.
4. காவல் ஆய்வாளர், கரூர் நகல் காவல் நிலையம்
5.அரசு குற்ற வழக்குரைஞர், கரூர்.